துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! அமைச்சர் க.பொன்முடி எழுதிய

# ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக் கொள்கிறார்! அமைச்சர் துரை முருகன் தலைமை!

சென்னை, அக்.25- தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எழுதிய ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல் வெளியீட்டு விழா இன்று(25.10.2024-வெள்ளிக் கிழமை) மாலை 6 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இந்நூலை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நூலை பெற்றுக் கொள்கிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

வீ.எம்.எஸ். சுபகுண ராஜனின் ‘கயல் கவின்’ பதிப்பகம் வெளியிடும் இந்நூலை தமிழில் அசதா மொழி பெயர்த்துள்ளார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் - கழக முன்னணியினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் -

# ரூ.5,780 கோடி மதிப்பீட்டில் அனைத்துப் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



சென்னை, அக். 25 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (23.10.2024) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் திரு.வி.க. நகர், கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தை ரூ.12.68 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, நடைபெற்றுவரும் பணிகளையும், புரசைவாக்கம், சலவைக் கூடத்தை ரூ.12 கோடி செலவில் நவீனப்படுத்தி, விரைந்து பணிகளை தொடங்குவதற்காகவும், திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்தை ரூ.5.35 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, நடைபெற்றுவரும் பணிகளையும், அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் பகிர்ந்த பணியிடம் (Co Working Space) அமைக்கப்பட்டு, நடைபெற்றுவரும் பணிகளையும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படியும் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் முழு வேகத்தில் முடக்கிவிட எங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 2023 - 2024, 20242025 ஆகிய ஆண்டுகள் வடசென்னை திட்டம் மற்றும் ஒட்டுமொத்த சென்னை வளர்ச்சி திட்டம் ஆக 140 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த 140 பணிகளில் பல்வேறு பணிகள் அரசாணைகள் பெறப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு, அந்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல பணிகள் இன்றைக்கு கட்டுமானங்கள் நிறைவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கின்ற அளவிற்கு அந்த பணிகள் முன்னேற்றம் கொண்டிருக்கிறது. குறிப்பாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் மாத்திரம் 668 கோடி ரூபாய் செலவில் கிட்டத்தட்ட 28 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த 28 பணிகளின் பூங்கா மேம்பாடு, கடற்கரை மேம்பாடு மூன்று பணிகள், ஏரிகள் மேம்பாடு 3, பேருந்து நிலையம் மேம்பாடு 6, வீடமைப்பு திட்டம், வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் திட்டம் 2, சந்தை மேம்பாடு 4, பள்ளி மேம்பாடு 2, விளையாட்டு அரங்கம் 2, சமூக மேம்பாடு 2, இரத்த சுத்திகரிப்பு மையம் 2, என 28 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சி திட்டப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுவதற்கு மாதிரிகளை பார்வையிட்டு, அதில் இருக்கின்ற சிறு சிறு குறைகளை சரி செய்து முழு வீச்சில் அந்த பணிக்குண்டான அரசாணைகள் பெறப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்த பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. வடசென்னை வளர்ச்சி திட்டத்தை பொறுத்தளவில் மார்ச் மாதம் 14 ஆம் தேதி அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய சென்னை, தங்கசாலையில் அந்தத் திட்டங்களை தொடங்கி வைத்தார். ஆரம்பத்தில் 4,228 கோடி ரூபாய் அளவில் துவக்கப்பட்ட அந்த திட்டம், இன்றைக்கு 5,500 கோடி என்கிற அளவிற்கு அந்தத் திட்டங்கள் விரிவடைந்து இருக்கின்றன. அந்தத் திட்டப் பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தங்கள் பங்களிப்பாக துறை சார்பில் 685 கோடி ரூபாயில் பணிகள் மேற்கொண்டாலும் 1000 கோடி ரூபாய் அளவிற்கு மற்ற பணிகள் மற்ற துறைகளுக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி அந்த நிதியை ஒதுக்கீடு செய்து இருக்கின்றோம்.

இப்படி மாநகர வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தும் முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சிக்கு தனி கவனம் செலுத்தி வாரந்தோறும் இதற்குண்டான பணிகளை கேட்டறிந்து ஆய்வு செய்து பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணிகள் அனைத்தும் ஒன்று, இரண்டு, மூன்று என்று மூன்று பகுதிகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது எங்களைப் பொறுத்தளவில் எடுத்துக் கொண்டிரு க்கின்ற பணிகள் 230 க்கும் மேற்பட்ட பணிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் இதில் குறிப்பிட்டு கூறுகின்ற நூற்றுக்கும் மேற்பட்ட பணிகளை அடுத்த ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் நிறைவேற்று வதற்கு உண்டான முயற்சி களில் தான் இப்படி காலை நேரத்திலேயே அந்தந்த பணிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகளை ஆய்வு செய்து இருக்கின்றோம் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இருக்கின்ற பணிகள் குறித்து ஆய்வினை மேற்கொள்வது என்கின்ற திட்டமிட்டு இந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.அன்சுல் மிஸ்ரா அவர்களும், மாநகராட்சியின் மத்திய வட்டார துணை ஆணையாளர் பிரவீன்குமார் அவர்களும் பகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்களும், இன்றைக்கு அவர் பகுதியிலே நடைபெறுகின்ற இரண்டு பணிகளை பார்வையிட வேண்டும் என்று கோரிக்கை ஏற்ப இரண்டு பணிகளை பார்வையிட்டிருக்கின்றோம். 6 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கின்ற விளையாட்டு மைதானம், உடற்பயிற்சி கூடம், சிறுவர் விளையாட்டு பூங்கா, பாக்சிங் புட்பால் அது போக டென்னிஸ் போன்ற அனைத்து வசதிகளும் உருவாக இருக்கின்ற விளையாட்டு மைதானத்தைப் பார்வையிட்டோம்.

அதைத் தொடர்ந்து 100 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்ற சலவை தொழிலாளர்களுடைய சலவைக்கூடத்தை யபார்வையிட்டு அதை மேம்படுவதற்குண்டான அனைத்து பணிகளும் துவக்க வேண்டியுள்ளது. சலவைத் தொழிலாளர்களுக்கு இந்த பணிகள் துவக்குவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைப்பதற்காகவும், இந்த இடத்தை ஆய்வு செய்வதற்காகவும், இன்றைக்கு வருகை தந்தோம். யாருமே கண்டுகொள்ளாமல் இருந்த இப்படிப்பட்ட சுகாதாரமற்ற சூழ்நிலை அவர்கள் தொழிலுக்கு ஏற்றார் போல் வசதி வாய்ப்பு இல்லாத இடங்களை கண்டறிந்து முதலமைச்சர் அவர்கள் இந்த வடசென்னையை வாடா சென்னையாக ஆக்குவதற்கு பணித்திருக்கின்றார்கள். தொடர்ந்து எங்கள் ஆய்வுகளும் எங்களுடைய பணிகளும் தொடர் ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டு நிறைவாக பணிகள் நிறைவற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உண்டான அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே, பிரவின் குமார், மண்டலக்குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ். ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி.விஜயகுமாரி, மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், செயற் பொறியாளர் சரவணன், பகுதிச் செயலாளர் ஐ.சி. எப்.வ. முரளிதரன், மாமன்ற உறுப்பினர்கள் சரவணன், திருமதி.தமிழ்ச் செல்வி சசிகுமார், நாகராஜன், திருமதி.தாவுத்பீ, உள்ளாட்சி பிரதிநிதிகள் தமிழ்வேந்தன், சாமிகண்ணு, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபாய், வெங்கடேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



பிலிப்பைன்ஸ் நாட்டில் மருத்துவம் (எம்.பி.பி.எஸ்.) படித்து வந்த கோயம்புத்தூர், ஓமலூர் பகுதி சேர்ந்த மருத்துவக் கல்லூரி மாணவர் ஜெயசூர்யா நாராயணன் என்பவரின் கல்வி விசாகாலம், அவரது கல்லூரி படிப்பு முடிவதற்குள் காலாவதி ஆகிவிட்டதால், டூரிஸ்ட் விசா பெற்று தன் படிப்பை நிறைவு செய்தார். ஆனால் சுற்றுலா பயணிகளுக்கான விசா காலத்தில் படிப்பை முடித்ததால், அவர் நம் நாட்டிற்கு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டு, பிலிப்பைன்ஸ் நாட்டை விட்டு வரமுடியாமல் தவித்தார். இது குறித்து மாணவரின் குடும்பத்தினர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமியை நேரில் சந்தித்து நடைபெற்ற சம்பவத்தை எடுத்துரைத்தனர், உடனடியாக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெயசங்கருக்கு (01-09- 2024) அன்று நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் எழுதி மேற்படி மாணவருக்கு நாடு திரும்பிட உதவிடும் படி கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து, டாக்டர். கலாநிதி வீராசாமி தொடர் முயற்சியால், தற்போது மருத்துவக் கல்லூரி மாணவர் ஜெயசூர்யா நாராயணன், நமது நாட்டிற்குத் திரும்பி வந்துள்ளார். தொடர் முயற்சி மேற்கொண்டு உதவிய டாக்டர்.கலாநிதி வீராசாமியை மாணவர் ஜெயசூர்யா நாராயணன் மற்றும் அவரது குடும்பத்தினர் நேரில் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# தமிழ்நாடு கொடுக்கிறது! வட நாடு கெடுக்கிறது!



அறிஞர் அண்ணாவின் சொல்லாடல் நினைவுக்கு வருகிறதா! "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்ற அண்ணாவின் முழக்கம் கேட்டு வட நாட்டு அரசியல் தலைவர்கள் அதிர்ந்தனர் . ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. இன்றும் அதானிகளும் அம்பானிகளும் நரேந்திரர், அமீத் ஷா ஆதரவினால் வாங்காத துறைமுகங்கள் இல்லை. வளைக்காத தொழில்கள் இல்லை. செய்து வரும் மோசடிகளுக்கும் அளவே இல்லை. 1967 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா ஆட்சி செய்த போது சேலம் உருக்காலை போன்ற ஒன்றிய அரசின் பொதுத்துறை முதலீடுகள் தேவை என்று ஒன்றிய அரசிற்கு எதிராக 'எழுச்சி நாள்' களம் அமைத்தார்.

196 7அறிஞர் அண்ணா உரிமைகளை மட்டும் கோரவில்லை. ஆட்சிப் பொறுப்பை அளித்த ஏழை எளிய மக்களின் உணவு, கல்வி வாழ்வாதார உரிமைகளை நிறைவேற்றினார். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரசியை மக்களுக்கு வழங்கிய பின்னர் தான் அமைச்சர்கள் தங்களின் மாத ஊதியத்தைப் பெற்றார்கள். அறிஞர் அண்ணாவின் இரண்டு ஆண்டுகள் ஆட்சி. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஐந்து முறை ஆட்சிகள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்ற ஆட்சியில் பல வளர்ச்சித் திட்டங்கள் மானுட முன்னேற்ற நோக்கில் நிறைவேற்றப்பட்டதினால் தான் ஐக்கிய நாடுகளின் மன்றத்தின் வளர்ச்சி அறிக்கைகள் வற்புறுத்தி வருகின்ற குறிக்கோள்கள் தமிழ் நாட்டில் வெற்றி பெற்று வருகின்றன.



பேராசிரியர் மு. நாகநாதன்

தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சியால் ஒன்றிய அரசு விதிக்கும் வரி வருவாய் பெருகி வருகின்றன. ஆனால் என்ன நடக்கிறது? சான்றாக, தமிழ்நாட்டின் 100ரூபாய் அளவிற்கு வரி வருவாயை ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு 29 ரூபாயைத் தமிழ்நாட்டின் அரசிற்குத் திரும்ப அளிக்கிறது. மீதம் 71% விழுக்காடு தமிழ்நாட்டின் வரி வருவாய் எங்கே செல்கிறது? பாஜக ஆட்சி செய்யும் உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களுக்கு அளித்து வருகிறார்கள். இப்படிச் சில மாநிலங்களின் வரி வருவாயை வட மாநிலங்களில் குவித்தும் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் அம்மாநி லங்கள் வளர்ந்து வருகின்றனவா? மும்பையிலிருந்து வரும் அரசியல் பொருளாதார வார ஏட்டில் (அக்டோபர் 12- 2024 ) பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மூன்று ஆசிரியர்கள் (பிரியா பர்ட்டா, சௌமியா பர்ட்டா, வினய் குமார்)இணைந்து, இந்தியாவின் 19 மாநிலங்களின் சுகாதாரத்துறையின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து மாநிலங்களுக்கிடையே மருத்துவத் துறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

தாய் சேய் உடல் நலம், இறப்புகள் அரசின் மருத்துவக் கட்டமைப்பு போன்ற முதன்மையான குறியீடுகளை உட்படுத்தி 19 மாநிலங்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். இக்குறியீடுகளைக் கொண்டு சுகாதாரக் குறியீடுகளில் அதிகமான, நடுத்தரமான, குறைந்த அளவிலான பாதிப்புகளுக்கு உள்ளான மாநிலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளனர். பாஜக ஆதரவோடு முதல்வர் பல்டி குமார் ஆட்சி செய்யும் பீகார் மாநிலம் தான் குழந்தைகள் இறப்பு. வளர்ச்சி அடையாத குள்ளக் குழந்தைகள், இரத்த சோகை, காசநோய் பாதிப்பிற்கு உள்ளானவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், உத்திரப் பிரதேசம், ஒடிசா, குஜராத் மாநிலங்களில் பீகாருக்கு அடுத்த நிலையில் உள்ளன ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், இராஜஸ்தான், மராட்டியம் , ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நடுத்தரப் பாதிப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

தாய் சேய் இறப்பு, இரத்தச் சோகை காசநோய் போன்ற பாதிப்புகள் குறைந்த அளவிலான மாநிலங்கள் பட்டியலில் வடமாநிலங்களான அரியானா, பஞ்சாப், உத்தரகாண்டு, தென்னகமாநிலங்களான தமிழ்நாடும் கேரளாவும் உள்ளன.

தமிழ்நாடு மட்டுமே மேற்குறிப்பிட்ட உடல் நலப் பாதிப்புகளில் குறைந்த அளவிலான மாநிலமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

எல்லாச் சுகாதாரக் குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. (Tamilnadu performs well across all the indicators of health deprivation- page 67 ) ஒன்றிய அரசை ஆட்டிப் படைக்கும் நரேந்திர - அமீத் ஷா பிறந்த மாநிலமான குஜராத்தில் ஆறுமாதம் முதல் 59 மாத வளர்ச்சிப் பருவத்தில் உள்ள குழந்தைகள் மிக அதிகமாக அளவில் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். (Gujarat has the highest percentage of children within the age of 6-59 months having anaemia. page - 67) இந்தக் கட்டுரையை எழுதியவர்கள் மூன்று ஆய்வாளர்களும் நரேந்திரர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள பனாரஸ் பல்கலைக்கழகத்தின் பணியாற்றும் ஆசிரியர்கள். தமிழ்நாடு வளர்கிறது. வரிவருவாய் வாரிவழங்குகிறது.

அந்த வரி வருவாயில் தமிழ்நாட்டிற்கு உரிய அளவில் கொடுக்காமல் பெருமளவில் ஒன்றிய அரசு நிதி பகிர்வின் வழியாக வட மாநிலங்களுக்கு வாரிக் கொடுக்கிறது. அள்ளிச்சென்ற இந்த வரி வருவாயைக் கல்வி, சுகாதாரத் துறைகளுக்குப் போதிய அளவில் ஒதுக்கீடு செய்யாமல் வட மாநிலங்களில் வாழும் ஏழை ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றி வருகிறது. மத இருளில் மக்களை வீழ்த்தி மானுட வளர்ச்சியைத் தடுக்கிறது வடநாடு மக்களைக் கொடுமை செய்கிறது.

குரோம்பேட்டை ஜி.எஸ்.டி.சாலையில்

# ராதா நகர் சுரங்கப்பாதை தடுப்புப் பணியை விரைந்து முடித்திடுக!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு உத்தரவு

தாம்பரம், அக். 25- குரோம் பேட்டை ராதா நகர் சுரங் கப்பாதை பணிக்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்புகளை 3 நாளில் மாற்றி அமைத்து, ஜிஎஸ்டி சாலையில் போக்குவரத்து நெரிசலுக்குதீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு எம்எல்ஏ இ.கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

குரோம்பேட்டை பகுதியில் ஜிஎஸ்டி சாலையில் இருந்து ராதா நகர் பகுதிக்கு பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் எளிதாக சென்று வரும் வகையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. சுரங்கப்பாதையின் பெரும்பாலான பணிகள் முடிவடைந்த நிலையில் ஜிஎஸ்டி சாலை பகுதியில் இறுதிக்கட்ட பணிகள் வருகிறது. இந்த பணிகளு க்காக ஜிஎஸ்டி சாலையில் தடுப்புகள் அமைக்கப்ப ட்டுள்ளதால் தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் அப்பகு தியில் கடுமையான போக் குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இந்நிலையில் தீபாவளி பண்டிகை வர இருப்பதால் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று நேற்று மாலை பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணா நிதி தலைமையில், மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ரயில்வே, நெடுஞ்சாலை, போக்குவரத்து துறைகளை சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது குரோம் பேட்டை ஜிஎஸ்டி சாலையில், ராதா நகர் சுரங்கப்பாதை பணிகள் நடைபெறும் பகுதியில் சாலையில் உள்ள தடுப்புகளை ஒன்றரை மீட்டர் உள்ளே நகர்த்தி அமைத்து போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவண்ணம் மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து பணிகளை முடிக்க வேண்டும் என அதிகாரிகளிடம் எம்எல்ஏ இ.கருணாநிதி கேட்டுக்கொண்டார்.

இதற்கு உடனடியாக பணி களை தொடங்கி அவற்றை சரி செய்துபோக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் **முல்லை க.சேகர் அவர்கள்**, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து; விடுவிக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரும் தென்னிந்திய நடிகர் சங்க துணைத் தலைவருமான பூச்சி எஸ். முருகன் , கும்மிடிப்பூண்டி மறுவாழ்வு முகாமில், நேற்று முன்தினம் (23.10.24) நடிகர் பிளாக் பாண்டியின் உதவும் மனிதம் அமைப்பின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன சக்கர நாற்காலி, நவீன ஊன்றுகோல் மற்றும் அரிசி, மளிகை, அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உதவிகளை வழங்கினார். வீட்டு வசதி வாரிய சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் ரவீந்தரநாத் ஜெயபால் உடன் இருந்தார்.